# சுட்டுக்கொல்லப்பட்ட கல்லூரிக் காவலாளியின் பெற்றோருக்கு வேலணை மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் – கனடா நிதியுதவி!



வேலணை மத்திய மகாத்தியாலயத்தின் இரவுநேர காவலாளியாக கடமை புரிந்த நேரத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட அமரர் நா. ஆனந்தராசா அவர்களின் வயோதிப தாய் தந்தையர்களுக்கு நிதியுதவி அளிக்கும்படி கல்லூரி அதிபர் திரு. கு. கணேசலிங்கம் அவர்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க கனடா, வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் இவ்வருட ஆரம்பத்தில் அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 37,267($860)இல் ரூபா7267ஐ அன்னாரின் மரணச் சடங்குச் செலவிற்கும் மிகுதி ரூபா 30,000ஐ வங்கியில் நிரந்தர வைப்பிலிட்டும் வழங்கப்பட்டது.

மேலே உள்ள படத்தில் அமரர் ஆனந்தராசா நினைவு நிகழ்வு மண்டபத்தில் நிரந்தர வைப்பிலிடப்பட்ட சேமிப்புச் சான்றிதழை கல்லூரி அதிபர் மறைந்த காவலாளியின் பெற்றோரிடம் கையளிப்பதையும் அதிபருடன் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியைகளான திருமதி வேதவல்லி அரசரத்தினம் அவர்களும், திருமதி சிந்தாமணி பழனி அவர்களும் இங்கே காணப்படுகின்றனர்.